பக்கங்கள் 8 விலை சதம் 40

# ஈழநாடு

EELANADU

மலர் 21 கார்த்திகை 15 முஹறம் 10 இதழ் 292
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 1-12-79




நிக்கோவுக்கு வேறு கிளைகள் கிடையாது

தரத்தில் நிகரற்ற
மான், மூயல், விளக்கு,
வரிக்குதிரை,
செவன மார்க்
ஓடுகளுக்கு

மு தா. பொன்னம்பலம்
36, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7493

## "பாராளுமன்றம் எமது யுத்தகளம்

# துப்பாக்கிகள் அல்ல வார்த்தைகளே ஆயுதம்"

## துட்டகைமுனுவைபோன்று நானும் பாராட்டுகிறேன்

### சபையில் சாவகச்சேரி 'நவம்'

(கொழும்பு)

பாராளுமன்றத்தை நாம் எமது யுத்தகளமாகவே கருதுகிறோம், துப்பாக்கிகளையோ வாள்களையோ அன்றி அணுசக்தி ஆயுதங்களையோ நாம் பாவிப்பதில்லை எமது வார்த்தைகளே எமக்கு ஆயுதங்கள்.

துட்டகைமுனு அரசன் எல்லாள மன்னனை போர்முனையில் கொன்று பாராட்டியிருந்தான் அதேபோன்று இன்று நான் எமது போர்க்களமாகிய இந்த சபையில் நின்று பிரதமர் திரு ஆர். பிரேமதாசாவைப் பாராட்டுகிறேன் நாம் எமது [illegible] விட்டுவிட்டு பிரதமரைப் பாராட்டுகிறேன் என்று எவரும் கருதவேண்டாம்

கோண்டாவில் தொகுதியின் புதிதாகக் கட்டப்படும் பாராளுமன்றத்திற்கு நம்மில் எத்தனை பேர் வருவோம் என்று தெரியாது ஏனெனில் புதிய பாராளுமன்றம் திறக்கப்படும்போது நாம் சங்கிலி [illegible] போகவேண்டியதில்லை ஏற்படலாம்

இவ்வாறு சாவகச்சேரி எம். பி. திரு வி. என். நவரத்தினம் நேற்று மாலை பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினார்

பிரதமரின் அமைச்சுக்கான செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தின் பேசுகையிலேயே திரு நவரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்

அவர் அன்று பேசுகையில் நிதி ஒதுக்கீடு மீதான வரவு மேலும் கூறியதாவது:

வானொலியும் பத்திரிகைகளும்...

நான் இப்போது பிரதமரைப் பாராட்டியபேசியதை

(8ம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்டம் நீடிப்பு

(கொழும்பு)

யாழ் மாவட்டத்தில் அவசரகாலச் சட்டம் மேலும் ஒரு மாதம் நீடிக்கப்பட்டுள்ளது என்று சபாநாயகர் இன்று சபையில் அறிவித்தார் (இ)

## பத்திரிகையாளர் மகாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ் பொலிஸ்நிலைய மாநாட்டு மண்டபத்தில் [illegible] 5 [illegible] மாலை யாழ் பொலிஸ் [illegible] திரு [illegible]

8 [illegible] பார்க்க

## வடக்கில் அமைதி நிலவுகிறது

## அவசரகாலச் சட்டம் விரைவில் நீக்கப்படும்

### பிரதமர் பையில் தகவல்

(கொழும்பு)

அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஆட்சி நடத்தாமல் விரும்பவில்லை. யாழ் மாவட்டத்தில் தற்போது அமைதி நிலவுவதாக பாதுகாப்பு அதிகாரி [illegible] தெரிவித்துள்ளனர் [illegible] யாழ் மாவட்டத்தில் அவசரகாலச் சட்டத்தை நீக்கி விடுவோம்.

இவ்வாறு பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா நேற்று சபையில் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

தவிர்க்க முடியாத நிலையில் பொது மக்களின் பாதுகாப்புக்காகவே அவசரகாலச் சட்டம் [illegible] விருப்பின் கொண்டே நாம் அதை அமுல் செய்யவில்லை. தொடர்ந்து அதை அமுலில்

(5-ம் பக்கம் பார்க்க)

### அவசரகாலச் சட்டத்தின் கீழ்

## யாழ் மக்களின் குடியியல் உரிமைகள் பறிக்கப்படுகின்றன

(கொழும்பு)

ஐனாதிபதி திரு ஜெயவர்த்தனா பிரதமராக இருந்தபோது அவசரகாலச் சட்டத்தின் கீழ் தமது கட்சி ஆட்சி நடத்தமாட்டாது என்று கூறினார் ஆனால் இப்போது யாழ் மாவட்டத்தில் அவசரகாலச் சட்டத்தின்கீழ் ஆட்சி நடத்தப்படுகின்றனர். அவர்களது சுதந்திரமும் குடியியல் உரிமைகளும் பறிக்கப்படுகின்றன யாழ் மாவட்ட பாதுகாப்பு அதிகாரி பிரிகேடியர் வீரதுங்கா யாழ் மாவட்

(8-ம் பக்கம் பார்க்க)

## சபையில் 'நவம்' திடீர் சுகயீனம்!

### அம்புலன்ஸ் மூலம் ஆஸ்பத்திரி விரைவு

(கொழும்பு)

சாவகச்சேரி எம். பி. திரு வி. என். நவரத்தினம் நேற்றுமாலை பாராளுமன்றத்திலிருந்து இருதய நோய் காரணமாக "அம்புலன்ஸ்" மூலம் அழைத்துச் செல்லப்பட்டு கொழும்பு பெரியாஸ்பத்திரி இருதய நோய் சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்

மாலை 3-45 மணியளவில் சபையில் பிரதமரைப் பாராட்டியும் தமது இலட்சியத்தில் கொள்கை பற்றியும் அவர் ஆவேசமாகப் பேசினார் என்

8-ம் பக்கம் பார்க்க)

## ஷாவுக்கு அனுமதியளிக்க மெக்ஷிக்கோ மறுப்பு

### எகிப்து தஞ்சமளிக்க முன்வருகிறது

(வாஷிங்டன்)

ஈரானிய ஷா மீண்டும் மெக்ஸிக்கோ வர அனுமதிக்கப்படமாட்டார் என மெக்ஸிகோ அரசு அறிவித்துள்ள அதே வேளையில் எந்த தருணத்திலும் ஷாவை ஏற்றுக்கொள்ள எகிப்து தயாராக இருக்கிறது என்று எகிப்திய அரசு அறிவித்துள்ளது.

ஈரானிலிருந்து நாடுகடத்தப்பட்டதும் மெக்ஸிக்கோ சென்ற ஷாவுக்கு 6 மாத காலம் தங்கியிருக்க விஸா வழங்கப்பட்டது. 4 மாதங்கள் தங்கியிருந்தபின்னர் அமெரிக்காவில் சிகிச்சை பெற அனுமதிக்கப்பட்டிருந்தார். மீண்டும் மெக்ஸிக்கோ செல்ல விரும்பிய ஷாவுக்கு அந்தநாட்டு அரசாங்கம் விஸா வழங்க மறுப்புத் தெரிவித்துள்ள இச் செய்தியை வாஷிங்டனிலுள்ள மெக்ஸிகோ தூதுவர் ஷாவுக்கு தெரிவித்துள்ளார்.

இதே வேளையில் மெக்ஸிகோ அனுமதி மறுத்தது [illegible] எகிப்து ஈரானிய மாணவர் [illegible] தெரிவித்துள்ளனர் [illegible]

(8-ம் பக்கம் பார்க்க)

## மத்திய கிழக்கில் வேலைவாய்ப்பு

- மேசன்மார்
- தச்சுவேலையாட்கள்
- கூலியாட்கள்
- புள்டோசர் சாரதிகள்
- மின்சாரப்பொருத்துனர்கள்

உடனடியாகத் தேவை
ஆங்கில அறிவு அவசியம்.
தபால் மூலம் மட்டும் தொடர்புகொள்ளவும்.

JEN TRADES
41, BARBER STREET,
(2nd Floor)
COLOMBO—13

Labour Licence: 311 5241

## தேவை

படகு உற்பத்தித் தேவைக்கு கீழ்க்காணும் மரங்கள் உடனடியாகத் தேவை.

- சமண்டலை (HALMILLA)
- யாவறனை (YAVARANAI)
- நாவல் (NAVAL)
- பனிச்சை (PANNICHCHAI)
- பலா (JAK)
- கட்டாக்காலி

விலை விபரங்களுடன் கடித மூலம் உடனடியாகத் தொடர்பு கொள்க.

இயந்திரப் பொறியியலாளர்
சி—நோர், காரைநகர்.

6244

# மேற்கு ஐரோப்பாவில் யூ. எஸ். ஏவுகணைகளை நிறுத்துவதா?

## கிறிஸ்தவ சமாதான மாநாடு பலத்த கண்டனம்!

நியூயோர்க், நவ 30 — மேற்கு ஐரோப்பிய நாடு களில் அமெரிக்காவின் நடுத்தர ஏவுகணைகளை நிறுத்துவதைப் பலமாக எதிராக இயக்க ஒன்று நடத்துமாறு கிறிஸ்தவ சமாதான மாநாடு வற்புறுத்தியுள்ளது'' உலகசமாதான இயக்க மான கிறிஸ்தவ சமாதான மகாநாடு, மேற்கைரோப்பிய நாடுகளின் திருச்சபைத் தலைவர்களுக்கும் மத விசுவாசி களுக்கும் அனுப்பியுள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது!

அக் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது!

மேற்கைரோப்பிய நாடுகளில் இத்தகைய ஏவுகணைகளைக் கொண்டு தனது ஆயுத பலத்தை நவீனமயப்படுத்த "நேட்டோ" எடுத்துள்ள முயற்சிகள் ஐரோப்பிய மக்களுக்கு மட்டுமல்ல, உலக மக்கள் அனைவருக்குமே ஆச்சரியத்தையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளன.

படைக்குறைப்பு, ஆயுதப் பரிகரணம் ஆகியவற்றுக்காக உலக நாடுகளும் ஐ நா வும் மிகவும் கடுமையாக உழைத்து வருகிறபோது, அந்த முயற்சிகளையும் தொடுக்கிறுத போன்ற நூச செயல் நிச்சயமாக மூர்க்கத்தனமானதேதான். 600 புதிய அமெரிக்க ஏவுகணைகள் மேற்கைரோப்பாவில் வைப்பதாகில், அது நேட்டோவின் அணுவாயுத படைப்பலத்தை முற்றிலும் மாற்றியமைத்ததாகவே இருக்கு . நேட்டோவின் போக்கு பாவமும் முற்றிலும் மாறு பட்டுவிடும் — நாலாவது யுத்தம் ஒன்று தொடங்குமானால் முதலிலேயே அணுவாயுதங்கள் பிரயோகிக்கப்பட்டு விடும்.

அமெரிக்க ... குபாடைச்சந்திக்க பகுதியாகவே, மேற்கைரோப்பாவல் அணுப்போர் வெடித்துவிடு. இதன் மூலம் அணுவாயுதம் சிரழிவிலிருந்து அமெரிக்கக் கண்டம் தப்பி விடும். பலிகடாக்கள் போகிறவர்கள் ஐரோப்பியர்கள்தான்.

திடீரென்று இன்று சோவியத்யூனியனுக்கும் அமெரிக்காவுக்கும் ஒரு யுத்தம் ஏற்பட்டால் வெற்றி நிச்சயம் அமெரிக்காவுக்குத்தான். சோவியத்யூனியனில் தன் வைத்துள்ள இலக்குகளை அமெரிக்காவின்றும் அதன் அணுவாயுதங்களைக் கொண்டு தாக்கிவிட முடியும். இத்தகைய வாய்ப்புக்களை சோவியத்யூனியன் தவிர்த்துவருகிறது.

புதிய அணுவாயுதங்களை ஐரோப்பாவில் வைப்பதற்கு ஆதரவாக நிற்கும் மேற்குலகின் ராணுவ வட்டாரங்கள் இவை வைக்கப்பட்டபின்னர் அவற்றை தாமே முதலில் பயன்படுத்தவேண்டுமென்ற நிர்ப்பந்தத்தைக் கொள்ள மாட்டா என்பது என்ன நிச்சயம்?'' என்று அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது. (கு)

## பணயக்கைதிகளை விடுவிக்க சர்வதேச நீதிமன்றத்தில் மனு!

வாஷிங்டன், நவ 30 — ஈரானில் பணயம் வைக்கப் பட்டிருக்கும் அமெரிக்க அதிகாரிகளை விடுதலைசெய்ய உத்தரவிடுமாறு கோரி சர்வதேச நீதிமன்றத்தில் அமெரிக்க மனுஒன்றைத் தாக்கல்செய்துள்ளது.

கடந்த இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் அமெரிக்கா சர்வதேச நீதிமன்றத்தில் ஒருமனுத் தாக்கல் செய்திருப்பது இப்பொழுதுதான் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவில் புற்றுநோய் சிகிச்சைபெற்றுவரும் ஈரானிய ஷாவை ஈரானுக்கு அனுப்பி வைக்குமாறு கோரி ஈரானிய மாணவர்கள் கடந்த 4ம் திகதி தெஹ்ரானிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தை முற்றுகையிட்டு அங்கிருந்த 60 அதிகாரிகளையும் பணயம் வைத்தனர்.

ஆனால் அமெரிக்காவோ ஷாவை அனுப்பிவைக்கத் தொடர்ந்து மறுப்புத்தெரிவித்துவந்ததுடன் அங்கு சட்டவிரோதமாகத் தங்கி வந்த ஈரானிய மாணவர்களையும் நாடுகடத்த உத்தரவிட்டது.

இதேவேளை கடந்த 17ம் திகதி பணயம் வைக்கப்பட்டிருந்த கறுப்பர்களையும் பெண்களையும் ஈரானிய மாணவர்கள் விடுதலை செய்தபோதும் 49 அதிகாரிகளைத் தொடர்ந்து பணயம் வைத்திருந்தனர். இதனால் ஆத்திரமடைந்த அமெரிக்கா இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப் போவதாக எச்சரித்ததுடன் தனது கடற்படை போர்க்கப்பல்களை ஈரானிய கடற்பிராந்தியத்துக்கு அனுப்பிவைத்ததும் தெரிந்ததே. (கு)


# சிரித்த வாழ்வின் பூரித்த சிரிப்பு!




ஆனந்தமாகச் சிரித்து மகிழ்வது குழந்தை மட்டுமா? அம்மாவும் தான், காரணம்? மொறிசன்ஸ் கிறைப் மிக்ஷர்! குழந்தைக்கு ஏற்படும் வாயுப் பொருமல் உபாதைகளை அது உடனே நீக்கி விடுகிறது.

## மொறிசன்ஸ் கிறைப் மிக்ஷர்

உங்கள் குழந்தைக்கு வாயுப் பொருமல், அதனால் ஏற்படும் வயிற்று வலி, அல்லது பல் முளைக்கும் போது ஏற்படும் நோவு, மற்றும் சிறிய உபாதைகளுக்கு, ஒரு கரண்டி மொறிசன்ஸ் கிறைப் மிக்ஷர் கொடுங்கள். உடனே குழந்தைக்கு நிவாரணம் கிடைப்பது நிச்சயம்! அதன் இனிய சுவையும் குழந்தைக்கு மிகவும் பிடிக்கும்!

டாக்டர்களின் பாராட்டும் தாய்மாரின் நம்பிக்கையும் குழந்தைகளின் அபிமானமும் பெற்றது மொறிசன்ஸ் கிறைப் மிக்ஷர்

TAL - 5904


## இலவுகாத்த கிளிகளின் நிலை இந்த மாணவர்களுக்கு!

(கரும்பராய்)

கடந்தவருடம் க. பொ. த. உயர்தர முடிவுகளின்படி பல்கலைக் கழகத்திற்கு உயிரியல் விஞ்ஞானம், பௌதிக விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டு பல்கலைக்கழகம் செல்லாது நின்ற மாணவர்கள் தொடர்ந்து இனிமேல் எந்த ஒரு பீடத்திற்கும் பல்கலைக்கழகத்தில் அனுமதிக்கப்படமாட்டார்கள் என பல்கலைக்கழக பதிவாளரினால் கடித மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. சிங்களத்தில் அனுப்பப்பட்ட கடிதத்திற்கு ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டுள்ளது.

மருத்துவபீடம், பொறியியற்பீடம் என்பவற்றுக்கே தாம் தெரிவு செய்யப்பட வேண்டும் என்ற நோக்கத்தினால் பட்டதாரிப் படிப்பிற்காக கடந்தமுறை பல்கலைக்கழகம் செல்லாது நின்று மீண்டும் க. பொ. த. உயர்தர பரீட்சைக்குத்தோற்றி சிறந்த பெறுபேறுகளை பெற்றுள்ள மாணவர்களுக்கே நேரடியாக இக்கடிதங்கள் அனுப்பப்பட்டு வருகின்றன.

இம் முறைதாம் மருத்துவம், பொறியியல் பீடங்களுக்குத் தெரிவு செய்யப்படுவோம் என்ற நம்பிக்கையுடன் இருந்த மாணவர்கள் இக்கடிதங்களால் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

பல்கலைக்கழக விதியின் பிரகாரம் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் விதிபற்றி இதுவரை தாம் அறிந்திருக்கவில்லை எனவும், முன்னரே இதுபற்றி அறிந்திருந்தால் கடந்த வருடமே பல்கலைக் கழகத்திற்குச் சென்றிருப்போம் என மேற்படி மாணவர்கள் சிலர் விரக்தியுடன் கருத்துத் தெரிவித்தனர்.

யாழ்ப்பாண வளாகத்துடன் சில மாணவர்கள் தொடர்பு கொண்டபோது, இவ்விதமான கடிதங்களை பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டு, பல்கலைக்கழகம் செல்லாத மாணவர்களுக்கு அனுப்பி வைக்கும் படி உத்தரவு வந்துள்ளதெனக் கூறப்பட்டது. யாழ். வளாகத்தில் இருந்து பல கடிதங்கள், பல மாணவர்களுக்கு விரைவில் அனுப்பி வைக்கப்படவுள்ளனவாம்.

பாதிக்கப்பட்ட மாணவர்கள் இவ்விடயம் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டுவர முயற்சி எடுத்துள்ளதாகத் தெரிகிறது.

## மொரோக்கோவுக்கு சீன ஆயுதங்கள்

பாரிஸ், நவ. 30 — எகிப்தூடாக சீனா மொரோக்கோவுக்கு ஆயுதங்களை அனுப்பியுள்ளது.

பாரிஸில் "எயர்-மெயில்'' என்ற பெயரில் பதிவுசெய்யப்பட்ட விமானக்கம்பெனியின் விமானங்களில் இந்த ஆயுதங்கள் ரகசியமாக எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

பாரிஸிலிருந்து வெளியாகும் "வெலிட்ரெதி சமெதி'' எனும் பிரெஞ்சு வாரப் பத்திரிகை இத்தகவலை வெளியிட்டுள்ளது. (கு)

## ஆசிரிய இடமாற்றம்

(புளியங்குளம்)

வவுனியா மாவட்டத்திலிருந்து யாழ்ப்பாண மாவட்டத்திற்கு இடமாற்றம் கோரி விண்ணப்பித்திருந்த 150 ஆசிரியர்களையும் விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கப்பொதுச் செயலாளர் திரு த. மகாசிவம் மேற்கொண்டுவருகின்றார்.

அண்மையில் வவுனியா மாவட்ட இ. த ஆ. சங்கத் தூதுக்குழு திரு த. மகாசிவம் தலைமையில் வவுனியா மாவட்ட பிரதம கல்வி அதிகாரியைச் சந்தித்து இவ்வாசிரியர்களின் பிரச்னையைச் சுட்டிக்காட்டியது அதன் பின்னர் திரு மகாசிவம் கல்வி அமைச்சின் உதவிச்செயலாளரிடம் நேரடியாக தொடர்புகொண்டு இது தொடர்பாக பேச்சு நடாத்தினார்.

அதன் பயனாக கல்வியமைச்சின் உதவிச்செயலாளர் இவ்வாறு விண்ணப்பித்திருந்த ஆசிரியர்களின் விபரங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு பிரதம கல்வி அதிகாரியைப் பணித்துள்ளார் என்று அறியவருகின்றது. (கு)

